முருகப்பெருமான் துணை

**மகான் சத்யானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.02.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. பூரத்தில் அவதரித்த அரங்கனே
புண்ணியத்தை வளர்க்கும் தேசிகனே
வரம்பல பெற்று கலியினில்
வள்ளலாய் வாழுகின்ற குருராஜனே
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது கலை திங்கள்
வரமென மூவேழுதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 21 ம் நாள், 04.02.2024, ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் சத்யானந்தர் யானும்
3. யானும் துல்லிய ஆசிதனை
உலகநலம்பெற உரைப்பேன்
ஞானபலம் கொண்ட மக்களை
ஞாலமதில் படைக்கும் வரம் பல
4. வரம்பல பெற்று வந்த அரங்கன்
வழிகாட்டல் மக்களை தேற்றும்
அறமாக மகா சக்தியாக இருக்க
அகிலத்தார் அனுகி வந்து
5. வந்துமே அரங்க ஞானியர் தரும்
வல்லமையான சடாட்சர தீட்சை
எந்தவித தடையுமின்றி ஏற்று
இனிதே வழிபாடுகள் தொடர
6. தொடர துன்பங்கள் விலகும்
தீங்கில்லா ஞான வாழ்வாக
இடரை வெல்லும் வரம் பலவும்
இன்னும் கூடி உலக மக்களுள்
7. மக்களுள் அரங்கன் ஆசி பெற்றவர்கள்
மகத்துவமும் மாண்பும் கூடியே
தேக்கமின்றி சித்திகள் அடைந்து
தெய்வநெறிபட உலகில் வாழ்வர்

8. வாழ்வினில் தீவினை அழிக்கும்
வள்ளலாக மகான்களாகவே
தாழ்விலா சக்திகளும் கூடிட
தவராஜனின் தரும சாலைகளை நிறுவி

9. நிறுவி அன்னதான சேவையை
நிலவுலகில் போற்றி வளர்த்து
ஆறுமுகனார் ஆசி பலமும்
அடைந்துமே கலியுகம் தன்னில்

10. தன்னில் உலகை மாற்றும்
தனிப் பெருஞ் சக்திகளாகவே
அண்ணல் அரங்கன் வழியில்
அனைவரும் தேறி இனிதே

11. இனிதே ஞானயுகமாற்றம்
இணையிலா ஞான ஆட்சிதனை
கனிவேலவன் ஆசியுடன் படைப்பர்
கண்டுரைத்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—